**ந.க.எண் 0238/2017/அ4**

**மாவட்ட மேலாளர் அலுவலகம்,**
**டாஸ்மாக் லிமிடெட், தேனி.**
**நாள்: .06.2017.**

# அறிவிப்பு

தேனி மாவட்டத்தில் உள்ள 67 டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகளில் சேகரிக்கப்படும் காலி மதுபான அட்டைப்பெட்டிகள், பீர் அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகள் ஆகியவற்றை ஒராண்டிற்கு கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை எண் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்களை டாஸ்மாக் தேனி மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலையாக ரூ.525/க்கு எடுத்து 12.06.2017 முதல் 28.06.2017 மாலை 05.00 மணி வரை (அலுவலக வேலை நாட்களில் மட்டும்) விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்துடம் ரூ 20000ற்கான EMD தொகை வங்கி வரைவோலையாக இணைக்க வேண்டும். மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை 29.06.2017 மாலை 03.00மணி வரை தேனி மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். விலைப்புள்ளி விவரங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உரைகளில் சமர்ப்பிக்க வேண்டும். தாங்கள் விரும்பும் காகிதக் கழிவு/அட்டைப்பெட்டி வியாபாரிகள் தாங்கள் எடுக்கவிருக்கும் காலி மதுபான அட்டைப்பெட்டி(IMFS)பீர் அட்டைப்பெட்டி(BEER), காகித கழிவுகள் (WASTE) ஆகியவற்றின் விலை விபரங்களை அட்டைப்பெட்டிகளுக்கு எண்ணம் 1க்கும், காகித கழிவுகளுக்கு கிலோ ஒன்றிற்கும் என நிர்ணயம் செய்து வைப்புத்தொகையாக ரூ.**5,00,000/- (ரூபாய் ஐநது லட்சம் மட்டும்**) செலுத்தக்கூடியவர்களாகவும் கடைகளில் எடுக்கும் அட்டைப்பெட்டிகளுக்கு மாதத்தொகையை முன்கூட்டியே டி.டி.யாக செலுத்தக்கூடியவர்களாகவும் தங்களது லெட்டர் ஹெட் பேடில் எழுத்து மூலம் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அலுவலகத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விண்ணப்பங்களை 29.06.2017 பிற்பகல் 03.30 மணிக்கு மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பக்கட்டணம் திருப்பித்தரப்படமாட்டாது. விண்ணப்பத்துடன் வணிகவரி பதிவுச்சான்று இணைக்காத விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். மேலும் நிர்வாக காரணங்களால் இடைப்பட்ட காலத்தில் ஒப்பந்தத்தினை ரத்து செய்ய மாவட்ட மேலாளருக்கு அதிகாரம் உண்டு. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இதுபற்றி விபரங்கள் தேவைப்படின் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், தேனி அலுவலகத்தில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். மேலும் இந்த ஓப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களையும் மனுவையும் கீழ்கண்ட இணையதளத்தில் “http://www.theni.nic.in, and “http://www.tasmac.tn.gov.in பதிவிறக்கி நிரப்பி அனுப்பலாம்.

மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக், தேனி.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்.,
## மாவட்ட மேலாளர் அலுவலகம், தேனி மாவட்டம்.

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தேனி மாவட்டம் டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனைக் கடைகளில் சேகரம் செய்ய்ப்படும் காலி மதுபான அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகளை எடுத்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருதல்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் மற்றும் முகவரி | : | மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம், தேனி மாவட்டம். |
| 2 | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விவரம் | : | மதுபான சில்லரை விற்பனைக் கடைகளில் சேகரம் செய்ய்ப்படும் காலி மதுபான அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகளை எடுத்துக்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி |
| 3 | விண்ணப்பம் கிடைக்குமிடம் | : | மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக் லிட், தேனி மாவட்டம் – 625531. |
| 4 | இணையதளம் | : | இந்த ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை www.tenders.gov.in, www.tasmac.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம். மற்றும் விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கி நிரப்பி அனுப்பலாம். |
| 5 | விண்ணப்ப படிவம் விலை, செலுத்தும் விபரம் | | விண்ணப்பத்தின் விலை ரூ.525/– (ரூபாய் ஐநூற்று இருபத்து ஐந்து மட்டும்) கேட்புக் காசோலையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், தேனி என்ற பெயரில் செலுத்த வேண்டும். |
| 6 | விண்ணப்பம் எந்த தேதி முதல் எந்த தேதி வரை பெறலாம் | | விண்ணப்பம் 12.06.2017 காலை 10.00மணி முதல் 28.06.2017 பிற்பகல் 05.00 மணி வரை மட்டும் (அலுவலக நாட்களில் மட்டும்) |
| 7 | செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை (EMD) (By DD Only) | : | ஒப்பந்ததாரர்கள் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) பிணை வைப்புத் தொகை காசோலையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், தேனி என்ற பெயரில் செலுத்த வேண்டும். |
| 8 | செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை (By DD Only) | : | மாவட்டத்திலுள்ள 67 டாஸ்மாக் சில்லரை விற்பனைக் கடைகளில் சேகரம் செய்யப்படும் காலி மதுபான அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகளை எடுத்துக்கொள்வதற்காக ரூ 500000/-க்கான வங்கி வரைவோலை. |
| 9 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் தேனி மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான கடைசி நாளும், நேரமும் மற்றும் இடமும் | : | 29.06.2017 மாலை 03.00மணி வரை<br><br>மாவட்ட மேலாளர் அலுவலகம்,<br>டாஸ்மாக், தேனி – 625531. |
| 10 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும், நேரமும் | : | இடம் : மாவட்ட மேலாளர் அலுவலகம்<br>தேனி மாவட்டம், தேனி – 625531.<br>நாள் 29.06.2017 மாலை 03.30 மணி |

| | | | |
|---|---|---|---|
| 11 | ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கும் முறை | : | ஒப்பந்தப்புள்ளி கலந்துக் கொள்ளும் நபர்களில் எவர் அதிகத் தொகையை குறிப்பிடுகிறாரோ அவரே ஒப்பந்ததாரராக தேர்ந்தெடுக்கப்படுவார். |
| 12 | நிபந்தனைகள் | : | 1. மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.<br>2. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.<br>3. ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளின் கடைசியில் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கையொப்பமிடப்படாத ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்படும்.<br>4. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்ததாரர்கள் இருப்பிட சான்று அல்லது குடும்ப அட்டை நகல் அல்லது PAN CARD நகல் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.<br>(I) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விண்ணப்பதாரர்களில் ஆஜரில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர் அவர்களால் தேனி டாஸ்மாக் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்கள் 29.06.2017 அன்று மாலை 3.30மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.<br>(II) அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் (அல்லது) எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் எவ்வித காரணங்களையும், கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது. |

**மாவட்ட மேலாளர்,**
**டாஸ்மாக், தேனி.**

**விண்ணப்ப எண்.**

# காலி அட்டைப்பெட்டி டெண்டர் விண்ணப்பம் – 2017-2018

1. ஒப்பந்தகாரரின் பெயர் –
2. அலுவலக விலாசம் –
3. தொலைபேசி எண் –
4. வீட்டு விலாசம் –
5. தமிழ்நாடு அரசு அங்கீகார விற்பனை எண்
6. மொத்தக்கடைகள் – 67 (01.07.2017ன்படி)
7. காலி அட்டைப்பெட்டிகளின் விலை விபரம் மூன்று வெவ்வேறு நிறுவனங்களின் விலைப்பட்டியல் :– IMFS Beer Wastage

    a.
    b.
    c.

**8. தேர்வு பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும்**

a. முன்கூட்டி வைப்புத்தொகை – 5,00,000/-

b. வங்கியின் பெயர் மற்றும் ஊர் –

c. காசோலை எண் மற்றும் தேதி –

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

இடம்:–
நாள்:–

# நிபந்தனைகள்

i) காலி அட்டைப்பெட்டி மற்றும் காகிதக் கழிவுகளை எடுத்து அதன் வரைவோலையை முன் கூட்டியே செலுத்தி அதற்கான ரசீதை டாஸ்மாக் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ii) ஒவ்வொரு மாதமும் 15–ம் தேதி காலி அட்டை பெட்டிகளுக்கான கேட்புத்தொகை நகலை (DEMAND) டாஸ்மாக் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு அதற்குண்டான வரையோலை (Demand Draft) அலுவலகத்தில் செலுத்திய பின்னர் காலி அட்டைபெட்டிகளை கடைவாரியாக எடுப்பதற்குண்டான அனுமதி வழங்கப்படும்.

iii) தொடர்ந்து இரண்டு மாதங்கள் வரைவோலையை செலுத்தாத அல்லது செலுத்த தவறினால் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தத்ததை ரத்து செய்து விட்டு தங்களின் வைப்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதமுள்ள தொகையை கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

iv) தங்களின் ஒரு வருட ஒப்பந்தப்புள்ளி காலம் (2017-2018) முடிவுற்றபின் மாவட்டத்தில் உள்ள அனைத்து கடைகளிலும் இருந்து தடையில்லா சான்று (NOC) பெற்று டாஸ்மாக் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைத்த பின்னர் தங்களின் காப்புத் தொகையை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

இடம்:–
நாள்:–